530

# திராவிடத் தோழர்களே! மறந்து விடாதீர்கள்!!

“அய்யாதுரை”

R34
N49
172828

வுப் பண்ணை — —

# திராவிடத் தோழர்களே,
# மறந்துவிடாதீர்கள்!

"அய்யாதுரை"
எழுதியது

விலை ஆறணா

அறிவுப்பண்ணை
6, மங்கம்மாள் தெரு, (மின்ட் போஸ்ட்) சென்னை-1.

அச்சிட்டோர் :
மூர்த்தி பிரிண்டிங் ஒர்க்ஸ்,
சென்னை - 1.
*1949*

## அறிமுகம்

நாட்டில் நானுவித ஏடுகள் நடமாடுகின்றன. அவற்றில் ஒருசில தூற்றல் ஏடுகளாகக் காட்சியளிக்கின்றன. தூற்றுதலை ஒழித்து, நல்வழியில் செல்க என்ற அறிவுறுத்தலே இச் சிறுநூல்.

—பதிப்பகத்தார்.

= மு. கருணாநிதி தீட்டிய =

## நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| சங்கிலிச்சாமி | 0 | 8 | 0 |
| பலிபீடம் நோக்கி | 0 | 6 | 0 |
| அறப்போர் | 0 | 3 | 0 |
| கயிற்றில் தொங்கிய கணபதி | 0 | 3 | 0 |

விற்பனைக் கழிவு 25% - சிலவு இனம்.

அறிவுப்பண்ணையில்

= கிடைக்கும். =

# திராவிடத் தோழர்களே, மறந்துவிடாதீர்கள்!

எதைத் தின்றாலும் கசப்பாக இருக்கிறது. பண்டத்தின் உருசியைத் தெரிந்துகொள்ளும் நாவின் இயல்பு நாசமாகிப்போயிருக்கிறது. நாலு நாள் விடாக் காய்ச்சலின் விளைவு இது. மருத்துவர் வேண்டாம் இதனைக் கூற. சொந்த அனுபவமே போதும், இந்த உண்மையை அறிந்துகொள்ள.

வெண்ணெயின் வெண்மை—நீலத்தின் நிறம்—சேலையின் சிவப்பு—எதுவும் அவன் கண்களுக்கு மஞ்சளாகத் தெரிகிறது. தெரிந்தவர் கூறுவர், அவனுக்குக் காமாலை நோயென்று!

கூவுகிறான்—கர்த்தபம்போல் கத்துகிறான்—குக்கல் போல் குலைக்கிறான்—கட்டி இருக்கும் துணியைக் கந்தல் கந்தலாகக் கிழித்துக்கொள்ளுகிறான் — கௌபீனத்தையும் களைந்துவிட்டு கண்டவர் நகைக்க நடக்கிறான்—வெய்யில் வேளையிலும் வீதிவீதியாகத் திரிகிறான்—இரவி

லும், கண் தூங்குவதில்லை—சதா சர்வ காலமும் வாயில் வந்தபடியெல்லாம், ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாமல் உளறுகிருன். இவனைப் பைத்தியக்காரன் என்பர், பார்த்தவர் அனைவரும். கருணை காட்டுவோர் சிலர்—கல்லெறிவோர் சிலர்—கனமாகப் புடைப்போர் சிலர்—கண்டபடி ஏசுவோர் சிலர்—காரித்துப்புவோர் சிலர்—இதில் கருத்தைச் செலுத்தாமல் கண்களை மூடிக்கொண்டு தங்கள் கருமமே கண்ணுயிருப்போர் பலர்.

பெற்றுள்ள கல்வியை, கற்றுள்ள நாவன்மையை, பழகியுள்ள எழுத்துத் திறத்தை, ஒருவர் பெரிதாக மதித்துக்கொள்வது விரும்பக்கூடாததன்று, வரவேற்கத் தகுந்தது ஆகும். மற்றவர் கற்றிருப்பது, பேசப் பழகி இருப்பது, எழுதத் தெரிந்திருப்பது, எவ்வளவோ பங்கு தம்முடையதிலும் மட்டமானது என்று தாமே தீர்மானித்துக்கொள்வதும், திமிர் அடைவதும், அவ்வாறு கொண்டிருப்போரை, அகம்பாவிகளாகவும், பலரின் வெறுப்புக்கும் பகைமைக்கும் பாத்திரமானவர்களாகவும், அறிஞர்களின் நகைப்புக்குரிய ஜந்துக்களாகவும் இறுதியில் ஆக்கிவிடும். ஒருவனுக்குள்ள அறிவையும், ஆற்றலையும், தகுதியையும், திறமையையும், பிறர் எடுத்துக் காட்டினுல்தான் அது பெருமைக்குரிய விஷயமாகும்.

ஒருவர் முகத்துக்கு முன்னுல் பிறர் கூறும் வாழ்த்துரையாயினும் சரி, பின்னுல் பேசப்படும் புகழுரையாயினும் சரி, அதனைக்கேட்டு எந்த அளவுக்கு மகிழ்ச்சி கொள்வதாக இருந்தபோதிலும், அதற்குச் சம்பந்தப்பட்டவர் தலைவீக்கம் கொள்வது கூடாது. சாதாரணமானதுகளின் மண்டை உடனே கனத்துவிடும். முன்னுள் காணப்பட்ட நடை நொடி பாவனைகளில் தலை-

கீழ் மாற்றம் ஏற்பட்டுவிடும். அறிவும் ஆற்றலும் தொலைந்து, அகம்பாவம், அந்த இடத்தைப் பற்றிக் கொள்ளும். அகம்பாவம் இடம் பெற்றவுடன், தம்மைப் பற்றித் தவறுதலாகத் தீர்மானித்துக்கொள்ளவும், தமது பலத்தை மிகைப்படுத்திக்கொள்ளவுமான போக்கு, பிறர் தடுத்தாலும் மாற்றிக்கொள்ள நினைக்காத நிலையில், ஆழப்பதிந்துவிடும். எந்த நேரத்தில் இந்த விஷவிதை, ஒருவர் உள்ளத்தில் இடம் பெறுகிறதோ, அதே நிமிஷத்திலிருந்து அவருக்கு ஒரு புது நோய்—பயங்கரமானது — கண்டிருக்கிறது என்று பொருள். ஆற்றல் அரசர்கள் இரண்டொருவர்தான், இந்த மாயையில் சிக்கிச் சீரழியாமல் தப்புவர். மற்றவர் சில நாள் வெளிச்சத்தில் இருப்பதுபோல் இருந்து, பின்னர் மறையும் நாள் வரையில், ஊர் பேர் தெரியாமலே உயிரோடு இருந்து, உலகத்தைத் துறப்பர்.

ஆரம்ப வெளிச்சத்தைக் கண்டு அகமகிழ்வதோடு மட்டும் நின்று, அகம்பாவம் கொள்ளாமல், கொண்ட கோளினைத் தவறவிடாமல் தொண்டாற்றி வந்திருந்தால், அந்தத் தொண்டு நல்ல பயனைக் கொடுத்திருக்கும் என்பதோடு, தொண்டாற்றினவர்களுக்கும் நீடித்த நிலையான புகழைத் தந்திருக்கும். நோயின் தாக்குதலிலிருந்து தப்ப நினைப்பவன் மயக்க மருந்தை உட்கொள்ளும்பொழுது, நோயின் வேகம் தணிந்து நிம்மதி பெற்றபோதிலும், மயக்கம் தெளிந்த அதே விநாடி, முன்னிலும் நோயைத் தாங்கிக்கொள்ளும் சக்தி குறைந்திருக்கவும், நோயின் வேகமும் பன்மடங்கு அதிகரித்திருக்கவும், வேதனை கூடுதலாக இருக்கவும் காண்கின்றான். குறிப்பிட்ட ஒரு இலட்சியம், சொந்த லாபத்திற்குத்தான் என்று தீர்மானித்துக்கொண்டு பொது வாழ்வில் ஈடுபடுவோர், எதிர்பார்த்தபடி ஆரம்பத்தில் தமக்குச்

சிலரின் புகழ் கிடைப்பதைக் கண்டு மகிழவும், நாள் செல்லச்செல்ல, அத்துறையில் போட்டி அதிகரிக்க அதிகரிக்க, தமக்கு மட்டுமே ஏகபோகமாகக் கிடைத்து வந்த விருது, மற்றவர்களுக்கும் பகிர்ந்து அளிக்கப் படுவதைக் கண்டு ஆத்திரப்படவும், புகழுக்குப் பாத்திர மானவர்களை அவசியம் இருந்தாலும் இல்லாமற் போனு லும் தூற்றவும் பழித்துக் கூறவும் முனைவர். பிறர் போற்றுதல் கிடைத்தபோது மகிழ்ந்த நெஞ்சத்தில் செந்தேள் கொட்டின நிலை ஏற்படும். சிந்தனை மறை யும். சீற்றம் மிகும். சிறுவர், எவரைக் கண்டபோதி லும். செய்வது இன்னது என்று தெரியாது செயலாற்று வர். உள்ளத்தில் மறைந்து கிடக்கும் நஞ்சு, நாவிலும், நல்ல எழுத்திலும், புரியும் பணி ஒவ்வொன்றிலும் பிரதிபலித்துக்கொண்டிருக்கக் காணலாம்.

எத்துறையில் இருந்தபோதிலும், ஒருவர் புரியும் பணிக்கு, பிறர் சூட்டும் புகழ்மாலை, அந்தப் பணிக்குத் தரப்படும் விலையாகக் கொள்ளவேண்டுமேயன்றி, சொந்த யோக்யதைக்குத் தரப்படும் பரிசு என்று கொள்ளுதல் கூடாது. இந்த சூட்சுமத்தைத் தெரிந்து கொண்டவர்களுக்குத்தான் பொதுவாழ்வு பூங்காவாக இருக்கும்; புகழும் வரவர அதிகரிக்கும்.

நீரிலே கல்லெடுத்து எறிந்தால், கல்லின் பருமனுக் கும், வீசப்படும் வேகத்திற்கும், நீரின் பரப்புக்கும் ஒத்தாற்போல் சலனம் ஏற்படுவதும், சப்தம் பிறப்பதும், சிறிது நேரம் சென்றபின் நீரில் அமைதி ஏற்படுவதும் போலத்தான், பொதுவாழ்வில் ஈடுபடுவோரின் பணிக் கும், பொதுமக்களிடை சிலபல செயல்கள் நிகழ்கின்றன. பேச்சிலும், செயலிலும் எவ்வளவு கருத்தும், கவர்ச்சி யும் கலந்து இருக்கிறதோ, அந்த அளவுக்குப் பொது

மக்களின் வாழ்த்தும், தரத்திலும் அளவிலும் உயர்ந்த தாக இருக்கிறது. மக்களின் தேவைகளோடு, அந்த உரை கலந்திருக்குமானால், மக்களின் அன்பும் ஆதரவும் தினம் தினம் பெருகிக்கொண்டே இருக்கும். இது நீடிப்பதும், தோன்றிய உடன் மறைவதும், மேலும் மேலும் தொண்டாற்றுவதில் இழைந்து இருக்கிறது. உண்மையான ஆற்றலும் அறிவும் என்றும் பொது மக்கள் கவனத்திலிருந்து மறைந்துவிடாது. எவராலும் மறைத்துவிடவும் முடியாது. தென்றல் காற்று பரந்த நீர்ப்பரப்பில வந்து படியும்பொழுது விடாமல் நீர் சலனித்துக்கொண்டுதானே இருக்கிறது?

* * *

அவர் பட்ட அல்லல், அவமோகம், கிளம்பிய எதிர்ப்போ, இந்த இருபதாம் நூற்றுண்டில், வேறு எந்த சமுதாய சீர்திருத்தவாதிகளுக்கும் கிளம்பியது கிடையாது. எவ்வளவோ முடிமன்னர்கள், சொந்த இலாபம் கருதி, ஆரியத்தை உதட்டளவில் அலட்சியப் படுத்தினதற்கே, எந்த முறையையேனும் கையாண்டு, சாம்ராஜ்யங்களைச் சிதைத்து, மண்டலாதிபதிகளை சர்வ நாசத்துக்குள்ளாக்கிய ஆரியம், அதன் அடிப்படையையே தகர்த்தெறியும் பெரும் பணியில் ஈடுபட ஆரம்பித்த ஒரு சாதாரண மனிதரை, வாழ்த்தியா வரவேற்றிருக்கும்? ஆட்சியின் பிடி ஆங்கிலேயரிடமும், காலம் வேறுகவும் இருந்த காரணத்தால்தான், அவர் தீயில் தள்ளி பொசுக்கப்படவில்லை. நஞ்சுண்டு முடிவெய்தும் நிலையும் ஏற்படவில்லை. ஆனாலும் வேறு துறைகளிலே எதிர்ப்பு இருந்தது.

எதிர்ப்பு, அவருடைய நெஞ்சுறுதியை வளைத்து விடவில்லை; குறிக்கோளை மாற்றிக்கொள்ளும் சபலத்தைத் தரவில்லை. ஆரியத்தின் எதிர்ப்பு விரிவாக விரி

வாக, ஆரம்பத்தில் பதப்படுத்தப்படாமல் வீசப்பட்ட ஆயுதம், நாளாக நாளாக, அதிகக் கூர்மையாக்கப் பட்டுவிட்டது.

பலரின் படை எடுப்புக்கும், ஆங்கிலர் நுழைவிற் கும், நமது அடிமை வாழ்விற்கும், எது காரணம், எவர் அதன் கர்த்தாக்கள், மேலும் அதனை அழியவிடாமல் பாதுகாப்போர் எவர் என்பதனை,—மக்கள் தேவையை— முன்னேற்ற வழியை—அடிமை விலங்கை அகற்றும் பாதையை — அவர் கூறியபொழுது, அவ்வளவையும் எதிர்த்துக் கிளம்பிய ஆரியம் அம்பலப்படுத்திவிட்டது. பாதையில் பழுதைபோல் கிடந்த பாம்பு, நீதியை நிலை நாட்ட—நாட்டில் நேர்மையைக் காண—நாலு வார்த் தைக் கிளம்பியதும்; படமெடுத்து ஆடினதோடு மட்டும் அல்லாமல், நீதி கேட்போரை, தனது நச்சுப்பல்லால் தீண்டவும் முனைந்தால், பாம்பின் மண்டையில் பெரும் பாராங்கல்லைப் போட முன்வராமலா இருப்பார்?

வேதம் ஆகமம், இதிகாசம் புராணம், பள்ளி கொண்ட பரந்தாமனின் லீலா விநோதம், மும்மூர்த்தி களின் திருவிளையாடல்கள், எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவன், இவ்வளவும் அவர் உழைப்பை உருவில்லா மல் அடிக்க, பிரசாரத்தைத் தடுக்க, எழுப்புச் சுவர்க ளாக, பொதுமக்களுக்கும் அவருக்கும் இடையில் ஆரி யத்தால் எழுப்பப்பட்டன. பகுத்தறிவு வெடிகுண்டு வீசப்பட்ட வேகத்திலேயே, இருந்த இடங்கூடத் தெரிந்து கொள்ளமுடியாத நிலையில், அவ்வளவும் மறைந்தொழிந் தன. ஆரியம் சூட்டிய நாத்திகப் பட்டத்தை தலை நிமிர்ந்து ஏற்றார்! தேசத் துரோகி என்று முன்னாள் உடனிருந்தோர் பழித்துக் கூறியபோது, அந்தப் பழிச் சொல்லை பரவசத்தோடு மார்பிலே தாங்கிக்கொண்டார்.

எதிர்ப்பு அவருக்கு முன்னிலும் அதிக உற்சாகத்தை ஊட்டியதேயன்றி, உள்ளமுடையச் செய்யவில்லை. அதிகம் கூறுவானேன்? அன்று, தனித்து நின்று ஆரியத்திடம் போராடி, பலரும் தமது பகுத்தறிவு பாசறையில் வந்து ஒதுங்கும் நிலையை, இரண்டொரு ஆண்டுக்குள் ஏற்படுத்திய சிறப்பு நமது பெரியார் இராமசாமி ஒருவருக்கே உரியதாகும். எதிரியும் மறுத்துக் கூறத் துணிவுகொள்ளார் இதனை. பெரியார் இன்றி யமையாத இத்தொண்டில் ஈடுபட ஆரம்பித்த முன்னாள் வரையில், வேறு எவரும் இத்துறையில், இந்த அளவில், தொண்டாற்ற முன்வரவில்லை. நாட்டு நடப்பு இதனை மெய்ப்பிக்கிறது. வரலாறு, புராணமல்ல இல்லாதனதக் கூற!

பெரியார் செய்யாதொழியின், வேறு எவரும் செய் யாரோ இதனை, என்று கேட்கத்தோன்றும் சில சிறு மதியினருக்கு—பொறுமைப் பேயருக்கு. அமெரிக்காவை அன்று அவர் கண்டுபிடிக்காமல் இருந்தாலும், பின் பொருநாள், வேறு எவராவது அதனைக் கண்டுதான் இருப்பர். இருந்தாலும்; முதல் முதலாகக் கண்ட பெருமை கொலம்பசுக்குத்தான் உரியது.

பனியில் செல்லும் வேளையில் கம்பளம் போர்த்துக் கொள்வதும், வெய்யிலில் நடக்கும்பொழுது காலில் செருப்பு அணிந்துகொள்வதும், மழையில் போகும் காலை குடை பிடித்துக்கொள்வதும், குற்றமுடையது, என்று, பித்தம் தலைக்கேறி உள்ளவன்தான் கூறுவான். தட்ப வெப்ப நிலை—இடம்—எப்படி, எதுவாக இருந்தா லும் பொருட்படுத்தாமல் எப்பொழுதும் கம்பளி போர்த் துக்கொண்டும், குடை பிடித்துக்கொண்டும், செருப் பணிந்துகொண்டும், ஏன் இருக்கக்கூடாது என்று

கேட்க முன்வருபவன் ஒன்று விஷமியாக இருக்கவேண்டும் அல்லது மதியிலியாக இருக்கவேண்டும்.

நாட்டின் நடைமுறை பெரியார் போக்கை மட்டும் பொருத்திருக்கவில்லை. மற்ற கோட்பாட்டினர் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளுக்கேற்ப, மக்கள் மனநிலையில் மந்தமோ மாற்றமோ ஏற்படத்தானே செய்யும. அந்த நிலைக்கேற்ப—தாம் கொண்டுள்ள இலட்சியத்திற்கு முரண்பாடு இல்லாமல்—பிரசார முறைகளை மாற்றவும், வேறு தீவிர போக்கினைக் கைக்கொள்ளவுமான நிலை—பெரியாருக்கு மட்டுமல்ல—மற்ற எவருக்கும் ஏற்பட்டே தீரும். அரசியல் யூகம் அறிந்தவர்கள் எவரும், இதனைத் தவறானதெனக் கொள்ளமாட்டார்கள்.

'வாழ்வாவது மாயம்—மண்ணாவது திண்ணம்' என்னும் பாழான தத்துவத்தில் ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டிருந்த மக்களிடை, 'சூது மதியினர்—சுகபோகிகள்—சொந்த இலாபத்திற்காகக் கட்டிவிட்ட பொய்க் கதை அது—மறப்பீர் அதனை, வாழ்வு நித்தியம்—அதனை அடைய விழித்தெழுந்து போரிடுங்கள்—வெற்றி காணும் வரை சலிப்படையாதீர்கள்—அதற்கான ஒரே சாதனம் பகுத்தறிவு'—என்று புதிய கருத்தினைப் புகுத்துவது இலகுவில் நடக்கக்கூடிய காரியமன்று. இருந்தாலும் பெரியார், இத்துறையில் பெரிய அளவில் வெற்றி கண்டுள்ளார். இயக்க ஆரம்பத்தில் அவருடன் சேர்ந்த தோழர்கள் பலர், பின்னர் நாள் செல்லச் செல்ல, அவர்களிடமிருந்து இயக்கம் எதிர்பார்த்தத் தியாகத்துக்கு அஞ்சி, வேறு தங்குமிடங்களை நாடினர். அடிப்படை இலட்சியத்தில் அவர்களுக்கு உண்மையில் உறுதியான நம்பிக்கை இருந்திருக்குமானால், பிரிந்து, புகலிடம் தேடும் சிறுமதி ஏற்பட்டிருக்காது. பிரிந்து சென்றவர், பெரியா

ரையும், அவர்தம் போக்கினையும் கண்டிக்காமலும் இருக்கவில்லை. அதனையே முக்கிய பணியாகக் கொண்டிருந்தனர். இன்றும் கொண்டிருக்கின்றனர்.

அதுவும் சிலகாலமாக, பெரியாரின் புகழ் அதிகரிக்க அதிகரிக்க, பெரியாரின் பெரும் படையில் மக்கள் அதிகமாகச் சேரச் சேர, அந்த ஆஷாடபூதிகளுக்கு அடிவயிற்றிலிருந்து கிளம்புகிறது ஆத்திரம். என்ன செய்கிறோம், எப்படி எழுதுகிறோம் என்பதை எல்லாம் கவனிக்காமல், ஏதேதோ வாயில் வந்ததை எல்லாம் வாந்தி எடுத்து, ஏடுகளென நாட்டில் உலவ விடுகிறார்கள். அத்தகுக் குப்பைக் கூளங்களை வெளியிட, வேறு கட்சியினர்—வயிறு வளர்ப்பதற்காகவே வேஷம் போட்டிருப்போர்—தயவை நாடுகின்றனர், தன்மானம் துளியும் இன்றி.

* * *

கோடையில் அலைந்து களைத்துப்போய், நிழலைக் கண்டதும் மகிழ்ந்து, மரத்தடியில் படுத்து அயர்ந்து தூங்கிவிட்டான், ஒரு குல்லாய் வியாபாரி. அவன் அருகில் மூட்டை. அதுநிறைய குல்லாய்கள். இதைக் கண்ட குரங்குகள், அவன் தூங்கினபிறகு, மரத்தை விட்டு இறங்கிவந்து, மூட்டைகளை அவிழ்த்து, குல்லாய்களையெல்லாம் எடுத்து, ஒவ்வொன்றும் தம் தம் தலையில் மாட்டிக்கொண்டு மரமேறிவிட்டன. இரண்டொருமணி நேரம் கழித்து, கண் விழித்துப் பார்த்து, மூட்டை அவிழ்க்கப்பட்டிருப்பதையும், குல்லாய்கள் களவாடப்பட்டிருப்பதையும் கண்டு பதைபதைத்தான், குல்லாய் வியாபாரி. சுற்றுமுற்றும் பார்த்தான்; குரங்குகள் குல்லாய் அணிந்திருப்பதைக் கண்டான். கோபம் ஒருபக்கம்; வியப்பு ஒருபக்கம்; எவ்வாறு குல்லாய்

களைத் திரும்பப்பெறுவது என்னும் திகைப்பு ஒருபக்கம். அனைத்தும், ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்த்திற்று அவனை.

நீண்ட சிந்தனைக்குப் பின்னர், தனது தலையில் அணிந்திருந்த குல்லாயைக் கழற்றி வீசியெறிந்தான். இதனைக் கண்டிருந்த குரங்குகள், தம் தம் தலைகளி லிருந்த குல்லாய்களை, ஒன்றுவிடாமல் கழற்றி எறிந்தன!

இஃதேபோன்று சிலர், கதையில்வரும் மந்திகளை முன்மாதிரியாகக் கொண்டு, தங்கள் தங்கள் வாழ்க் கையை அமைத்துக்கொள்வர். கல்வி அறிவோ, கேள்வி ஞானமோ இவர்களுக்குத் தெரியாது—தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நினைப்பும் இல்லாதவர்கள். காட்சி ஒன்றுதான், இவர்களுக்கு வாழ்க்கை வழிகாட்டி. அது வும், காணும் பொருளில்—பிறர் நடை நொடிபாவனை களில்—மறைந்து கிடக்கும் உண்மைகளை உணர்ந்து கொண்டு, அதனை மேற்கொண்டு ஒழுகும் மூளைபலம் இல்லாதவர்கள். நாடகத்தில் வரும் இராஜா, காலையில் கந்தல் உடுத்தி காட்சி அளிப்பதுபோல், இவர்கள் நடவடிக்கைகளுக்கும், இவர்களுக்குள்ள அறிவுக்கும் சம்பந்தம் இருப்பதில்லை. பிறரைப் பார்த்து நடிக்கக் கற்றுக்கொண்டு — அதிலும் தேர்ச்சிபெருது — பலரின் பரிகாசத்திற்கு முடிவில் ஆளாகி, மூலையில் உட்கார்ந்து கொள்ளும் முடத்தெங்குகள் இதுகள்!

இத்தகு திருக்கல்யாண குணங்களை உடைய நடிகர் களை, மனித வாழ்க்கையில், எல்லாத் துறைகளிலும் காணலாம். பொதுவாக எல்லா கட்சிகளிலும், குறிப் பாகக் காங்கிரஸ் கட்சியிலும் மந்திமதி கொண்டோர் தொகை ஏராளம். இந்தக் குழுவினர்க்குத் தலைமைத்

தாங்கி, நாட்டில் நடமாடி வரும் சிலதுகளில், சிறந்தது இந்தச் சின்னது!—தீமலை!

* * *

பதவி ஏற்ற பின்னர், பதவிக்காக மயிர் பிடித்துச் சண்டையிடும் காங்கிரசாரின் போக்கினைக் கண்டு, முன்னுள் தாங்கள் செய்த தவறுகளை உணர்ந்து, வேதனை படுவதோடு மட்டுமல்லாமல், நல்லவேளையை எதிர் பார்த்துக்கொண்டும் இருக்கின்றனர், இந்த நாசகாரர் களுக்கு நற்புத்திப் புகட்ட மக்களில் சிறந்தவர்கள். காந்தியார் சாதித்ததைப் புத்தகமாக்கினுலும், நேதாஜி நினைத்ததைத் தீட்டினுலும், நேருவின் வீரப்பிரதாபத்தை நூலாக்கினுலும், இராஜாஜியின் குட்டிக் கதைகளைக் கண்கவர் வனப்புடன் புத்தகமாக ஆக்கினுலும், நாமக்கல்லின் தெம்மாங்குப் பாட்டினை உயர்ந்த கவிதை நூல் என்று உரத்துக் கூவினுலும், வாங்குவோரும் காணேம்—வயிறு நிறைந்தபாடும் காணேம். தொள்ளி மணியோ பல்லாயிரத்தை விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டு, ஆண்டு ஒன்றுக்குள் மலர்ந்து, அதன் தீய வாடையால் கொள்வோர் இல்லாமல் தீய்ந்து, சாம்பலாகப் போய் விட்டது. கோணிச் சட்டையும், குரங்கு குல்லாயும், கட்டை புத்தியும் இனி பயன்படாது ஏடு எழுத; என்பதனை, அந்த ஓலை படாஸ் சின்னது உணர்ந்து கொண்டது. எஞ்சிய நாளை எப்படியாவது கழித்தாக வேண்டுமே என்னும் பெருங்கவலை கொண்டு, நாட்டு மக்களின் மதியில் கலந்து நிற்கும் நமது திராவிட இயக்கத்தையும், நமது தலைவர் பெரியார் அவர்களையும், அறிஞர் அண்ணுவையும், மற்றும் அவர் பெரும் படை யினரையும் பொருளற்ற வார்த்தைகளால் தாக்கும் நற்பணியில் இறங்கியுள்ளது சின்னது! நாலு காசு

வேண்டுமானால், நாட்டில் எவ்வளவோ வேலையுண்டு. சின்னது போன்ற பகல் வேஷங்களுக்கு. அந்தி சந்தி வேளையில், முச்சந்தி முனையில், ஆபத்பாந்தவர்களாக அமர்ந்துவிட்டால், அன்றுடம் அரை வயிற்றையாவது நிரப்பிக்கொள்ளலாம்! இன்னும் சில நாள் சென்ற பின், அந்த நிலை வராமலா போகப்போகிறது இது களுக்கு?

நமது இயக்கம்—மக்களின் தேவையைத் தெரிந்த இயக்கம்—முன்னிலும் பன்மடங்கு வளர்ந்து இருப்ப தைக் கண்டதும்,—தாம் வெளியேறினதும் நிர்மூல மாகிவிடும் என்று தீர்மானித்துக்கொண்டு—வெளியே சென்றுவிட்ட அழுக்கு மூட்டைகள் இரண்டொன்று, உளறிக்கொட்ட ஆரம்பித்து இருக்கின்றன. நமது இயக்கத்தின் வேகமான வளர்ச்சி, இந்த மாமிசப் பிண்டங்களின் கண்களை உருத்துகின்றது. எனவே, கற்ற வித்தையைக் காட்டுவோம் என்று, கற்றுக்கொண்ட இடத்திலேயே காட்டக் கிளம்பி இருக்கின்றதுகள். எழுதட்டும் ஏடு, வேண்டாமென்று கூறுவார் இல்லை. விளக்கமுரைக்கட்டும், விதண்டாவாதம் செய்யாமல் வரவேற்போம். ஆனால், விளைவைத் தாங்கும் திறனற்ற இந்தத் தேகங்கள் ஏனோ இம்மாப்பழியை வெற்றிலைப் பாக்கு வைத்து வரவேற்றுக்கொள்ளுகிறதுகள் என்று நினைக்கும்பொழுதுதான், நமக்கு இதுகளிடம் ஆத்திரம் உண்டாவதற்குப் பதில் இரக்கம் பிறக்கிறது.

'திராவிடத் தோழர்களே, கெட்டுப்போகாதீர்கள்!' என்று திராவிடர் கழகத்தினருக்கு, நாம் விரும்பாமலே, உபதேசம் புரியும் பெருந்தொண்டினை மேற்கொண் டிருக்கிறார் ஒரு மதியிலியார். அவர் பெயர், 'தம்பித் துரை' என்று பொறித்துள்ளது ஏட்டிலே. அந்தப்

பெயரில் மறைந்திருக்கிறார் ஒரு நீக்கண்ணன்—திவ்விய ரூபன்—அகோரசொரூபன்—பலாக்காய முகத்தானே!

ஏனையா அச்சம், இயற்பெயர் கூற, அறிவுரை கூறவந்த அண்ணலாரே? உமது முக இலட்சணத்தை தெரிந்துகொண்டால், தாங்கள் குதிக்கால் பிடரியில்பட ஓடவேண்டிவருமே என்று பயந்து, முக்காடு இட்டுக் கொண்டு முணுமுணுக்க முனைந்தீரோ மூதேவியாரே? எழுதினீரே ஏடு, தமிழ் மட்டும் தெரிந்த பெருமானே, பெயர் கூறி இருந்தால் எவ்வளவு பரிசு இதுவரையில் தங்களுக்குக் கிடைத்திருக்கும் தெரியுமா? நாலு ஆள் பல்லக்கு — ஆடம்பரப்பறை — அனுதாப உரை — வாறு கோல் வரிசை—விதவிதமான அபிஷேகம்—'போதும் போதும்' என்னும் வரையில் கிடைத்திருக்குமே! இவ்வளவு விருதுகளையும் பெற்றுக்கொள்ள, உடல் வனமை இல்லாத காரணமா? உள்ள உறுதி இல்லாத காரணமா? பெயர் மறைந்து பேசப்பட்டதற்கு? துணிவிருந்தால், திரையைக் கிழித்துக்கொண்டு, திராவிடர்க் குத் திருப்பணி செய்யப் புறப்படுங்கள் இனியாவது! பெரியாரின் பெரும்படை, பிழை செய்யாது, பொருளுரையைக் கண்டால். களத்துக்கு வாருங்கள் மீசையை முறுக்கிக்கொண்டு, நற்றமிழர் வீரம் தெரிந்தவராக இருந்தால்! இதற்கு விருப்பமில்லையானல், 'சிவச் சிதம்பரம்' என்று நாவசையுங்கள்—சடைமுடியும் காவி உடையும் கொண்டு மகிழுங்கள்—குப்பையிலே புரளுங் கள்—உருத்திராட்சமணி அணியுங்கள்—ஏமாந்த இரண் டொருவர் உம்மை ஏற்றிப் போற்றுவர்! எஞ்சி நிற்கும் உமது ஆயுள் காலத்தை இத்துறையிலாவது, இன்ப நாட்களாகக் கழியுங்கள்! முன்னுள தோழமையின் விளைவு இந்த அறிவுரை; நன்றி என்ற நற்பண்பு

இன்னும் நமது உள்ளத்தில் இருக்கின்ற காரணத்தால் எழுந்தச் சொல் இது!

ஆந்திரர் அலட்சியம் செய்கின்றார்களாம்—கன்னடர் கருதவில்லையாம்—கேரளர் கிண்டல் செய்கிறார்களாம்—'திராவிடநாடு' என்னும் நமது இலட்சியபுரியைக் கேட்டு. தம்பித்துரையின் குற்றச்சாட்டு இது. ஆறிப் போன பழஞ்சோறு!

'எங்கள் இலட்சியம் காணீர், ஏற்புடையதா கூறீர்' ஒத்துழைக்க வாரீர்' என்று இதுவரை நமது கழகம் எந்தத் திராவிட மொழியினருக்கும் அன்பழைப்பு அனுப்பியது கிடையாது. பலமுறை கூறிவிட்டார் பெரியார் இவ்வாறு. அறிஞர் அண்ணா இடித்து இடித்துக் கூறியுள்ளார், நமது இலட்சியத்தை கையாண்டி செய்ய, இதனை ஒரு குறையாகக் கூறுவோருக்கு. நேர் மதியாளர், தமது தவறை உணர்ந்து, உள்ளம் திருந்தி, நமது அணியில் இடம் தேடிக்கொண்டுள்ளனர், கோணல் மதியினர்—அரைத்த மாவையே அரைக்கும் பேரறிவாளர்—இன்னும் வெளியிட முடியாத வேறு காரணத்திற்காக, இதனையே திரும்பத் திரும்ப, நாத் தழும்பேற நவிலுகிறார்கள்.

'திராவிடநாடு' சிறப்பை—தேவையை விரும்பாத காரணத்தால்தான், மற்ற மொழியினர் ஆதரிக்க வில்லையே என்று சேலிபேசி, பிரச்னையை மறுக்கவும்—மறைக்கவும் பார்க்கிறார்கள். நமது இலட்சியத்தின் அவசியத்தை இவர்கள் உணர்ந்துகொண்டவர்களாக இருந்திருந்தால், ஆந்திரரை அண்டி, திராவிடம் தனியாவதின் நன்மையை எடுத்துரைத்திருப்பர்; குறிக்கோள் வெற்றிபெற கேரளரின் ஒத்துழைப்பை நாடி இருப்பர்; கன்னடரின் ஆதரவைப்பெற முயன்றிருப்பர்.

'கிடைக்குமோ சுதந்திரம் — சுயராஜ்யம்' என்று; அன்று ஒருநாள் ஏகாதிபத்தியம்—தனது பலம் குன்றுது இருந்ததால் — கேட்டது, விடுதலை வேண்டினேரைப் பார்த்து! முடிவு, ஏகாதிபத்தியம் வலிய கொடுத்து விட்டு, வெளியேறியது—வேறு போர்வையில் முன்னுள் தொழிலை, சுரண்டலை — இன்றும் செய்துவருகிறது. 'பாக்கிஸ்தான்' சிறுபிள்ளை விளையாட்டு என்று இந்திய தேசியம் இறுமாப்போடு இயம்பியது. இறுதியில், ஒரு தனி மனிதனின் நாக்கு பலத்தினுலேயே, ஆரம்பத்தில் மறுக்கப்பட்ட இலட்சியம் உருவாகிவிட்டது. தியாகம் துளியும் இல்லாமலே, அந்தத் திருநாடு உருவெடுத்திருக்கிறது. 'திராவிடநாடு'ம் இன்று சிலபலரின் உள்ளத்தில் கருவாகி வளர்ந்து வருகிறது. எத்துக்காரர்களின் கிண்டலுக்கும், தத்துப்பித்துக்களின் நையாண்டிக்கும் இன்று அந்த இலட்சியபூமி உள்ளாக்கப்படுகிறது. ஏகாதிபத்தியம் சரிந்ததையும், இந்திய தேசியம் உறுதி குலைந்ததையும், கண்டிருந்தும் ஏனோ 'திராவிடநாடு' ஏற்படுமா என்பதில் கண்ணுமூச்சு விளையாடுதுகள்; கண்ணியத்தின் இலட்சணம் தெரியாத சின்னதுகள்!

'பெரியார் கன்னடராம். ஆதலால்தான் 'தமிழ்நாடு' என்று சொன்னவர் 'திராவிட நாடு' என்று பின்னர் பேசும் நிலை பெற்ருராம்! ஏடெழுதி, கூறுகிறது இவ்வாறு. இந்த மாற்றத்திற்கு விளக்கம் கூறப்பெறின் விரிவடையும், இந்த ஏடு. அறிஞர் அண்ணுவின் 'இலட்சியவரலாறு' காணட்டும் இந்தக் கபோதிகள்; பின்னர் பேச முந்தட்டும்.

'நாம் அனைவரும் இந்தியர் — பாரதமாதாவின் புதல்வர்கள்—ஒருவரோடு ஒருவர் பிணங்குவது நாட்டுப் பற்றுக்கு உகந்ததாகாது' என்று பேசும் தேசிய கோட்பாட்டிற்கு, தமிழர்க்குக் கன்னடர் தலைமை வகித்து

நடத்துவது முரண்பட்டது போலும்! படேலுக்கும் பண்டிதருக்கும், பிரசாத்துக்கும் போசுக்குமதானே, தமிழராயினும் மராத்தியராயினும் தெலுங்கராயினும் தலைமைதாங்கும் உரிமை உண்டு! மற்றவர்க்கு ஏது, அந்த உரிமை? தன்மானமற்றத் திருமேனியே! விடுவிடு இந்த அடிமை மோகத்தை! விஷம போதனை புரியும் வீண்பணியை!

'பெரியார் என் பெயரை மாற்றி வைத்துக்கொள்ள வில்லை?' என்கிறது சின்னது! எத்தனை முறை கூறுவது பதில்? களிமண் மண்டையா? இதுக்கு, மேல் மாடி காலியா? தோழர் இராமனுதனை, மாஜி அறிவுக் கொடி' ஆசிரியர் சாமி சிதம்பரனுரை, சாத்தாங்குளம் இராகவனை, கேட்டுத் தெரிந்துகொள்ளட்டும் இந்த வண்ணுந்துறை! பகுத்தறிவு பிரசாரத்தின்போது, கடவுள் கதைகளைக் கண்டித்த காலை, மரமண்டையி லிருந்து கிளம்பிய கேள்வி இது. தனித்தமிழ் ஆர்வத் திற்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. அன்று, தன்மான இயக்கத்தின் தளபதிகளாக இருந்த வர்களை—இன்று அணுகுண்டாரின் வயிற்றுப் பாட்டுக்கு வகை செய்தகொண்டிருப்போரை — கேட்டுத் தெளிவு பெறட்டும், தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமும் அவசரமும் ஆனல்.

'பெரியாருக்குத் தமிழ் எழுதத் தெரியாது' என்று ஏடெழுதி குறைகூறுகிறது. 'இரசிகமணி' T. K. சிதம்பரநாத முதலியாரைக் கேட்டால், கூறுவார் இதற்கு சரியான விடை. அவர் எழுதியத் தமிழினல்தான், அதாவது 'குடியரசு' இதழின் தொண்டினல்தான், சாமி சிதம்பரம்'நார்' ஆனுர்; தன்மானத் தமிழரானுர்; ஜாதிப்பித்துத் தொலைந்தார்; சிவகாமி நேசரானுர்;

நாட்டில் நான்குபேருக்குத் தெரியலானார். இதற்கு மேலுமா வேண்டும், பெரியாருக்குத் தமிழ் தெரியுமா தெரியாதா என்று விளக்கிக் கூற?

மதம் வேண்டுமென்று விரும்புவோர்களுக்கு, 'எவர் குரு?—எது வேதம்?—எவர் கடவுள்?'—என்று எவராலும் கூறமுடியாதததும், பகுத்தறிவைப் பாழாக்குவதும், பார்ப்பானுக்கு வாழ்வளிப்பது ஒன்றையே குறியாகக் கொண்டதும், மூடநம்பிக்கைகளுக்கு முதல் தாம்பூலம் பெற்றுக்கொண்டிருப்பதும், பிறப்பினாலேயே மக்களை இழிவு செய்வதும் இவ்வளவு சிறப்புக்குரிய 'ஹிந்து' மதத்தைக் காட்டிலும் இஸ்லாம் மதம் சிறந்தது என்று பெரியார் கூறினாரேயன்றி, அம்மதத்திலே காதல் கொண்டு அல்ல. உலக வரலாற்று ஆசிரியர்களில் சிறந்தவர்கள் அனைவரும், இந்தக் கருத்தைத்தான் கூறி வைத்துள்ளார்கள். இதில் பெரியார் மீது குறை காணுவது எந்தவகையிலும் பொருத்தமுடையது அன்று.

மது ஒழிப்புப் பிரசாரஞ் செய்துகொண்டே, மது விளம்பரம் போட்டு பணம் சம்பாதித்துக்கொண்டிருந்தது, தேசீயப் பத்திரிகைகளின் பிராசைக்கும் மனசாட்சிக்கும் எடுத்துக்காட்டு போலும்! மனம் மொழி மெய்களால் போர் எதிர்ப்புப் பிரசாரம் செய்துகொண்டு, அரசியலார் கொடுத்த போர் விளம்பரத்தையும் பத்திரிகையில் போட்டுப் பொருள் திரட்டியது, தேசீய நேர்மையின் முழு இலட்சணம் போலும்! காந்தீய வழியே உயர்ந்தது என்று உலக அரங்கில் கூறிக் கொண்டு, ஊராளவந்தவர்கள் பசித்த மக்கள் மீது படையை ஏவுவதும், குண்டடி பட்டு பாமர மக்கள் புழுப்போல் சுருண்டு விழுவதைக் கண்டு—கண்ணீர் பெருக்குவதற்கு மாறாக—மகிழ்ச்சிக்குறி காட்டுவதும், முதல்தரமான சத்தியசோதனை போலும்!

இவ்வளவிலும் தவறு காணாத தப்பிலிகளுக்கு, போருக்கு ஒத்துழைப்பதே முடிந்த கொள்கை என்று கொண்டிருந்த பெரியார் போர் பிரசாரத்துக்கென்றே, 'விடுதலை'யை, அரசியலாருக்கு வாடகைக்கு விட்டதில் தவறு காணத் தகுதிதான் ஏது? கண்ட தவறுதான் என்ன?

பாமர மக்களிடத்தில் புகழ்பெற்று — பாராட்டுப் பெற்று — நம்பிக்கை பெற்று, நாடாளும் வாய்ப்பு கிடைத்தவுடன், 'பொறுத்திடுக பசியை! குவித்திடுக பிர்லாவிற்கும் டாட்டாவிற்கும் பணத்தை' என்று கூசாது கூறிவருகிறாரே, நமது காது செவிடாகும்படி பண்டிதரும் பட்டேலும், இது நீதியா நேர்மையா, என்பதனை எடுத்துக் கூறுமையா, பெரியாரைப் பேத புத்திகொண்டு தடித்த வார்த்தைகளால், மடத்தனமாகப் பேசி, சொந்த ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளும் தீரரே! மூன்னாள் பண்டிதர் பேசிய சமதர்மம், முதலாளிகள் நடந்துசெல்லும் பாதையாக மாறின கதையை எடுத்துக்காட்டாமல், ஏனையா பெரியாரை இழித்துக் கூறும் ஈனச்செயல் புரிகிறீர்? பணமூட்டைகளின் பாதுகாவலராகப் பண்டிதர் மாறிவிட்டது, உமது பகுத்தறிவு மூளையில் படவில்லையா? அல்லது பட்டும் பேசாமல் இருக்கிறீரா? இனியாவது பெரியாரைப் பழிப்பதை நிறுத்தி, நாட்டுக்கு நல்லது கூறி, 'இந்தியா எங்கே போகிறது?' என்பதை எடுத்துக்காட்டுங்களையா, ஏடு எழுதியே!

அரசியல் அதிகாரத்தை அடைந்த பின்னர் சமுதாய சீர்திருத்தம் செய்வது சுலபமாம். இதனை நாம் அறிந்து கொள்ளாமல் வீணுக்கு உழைக்கிறோமாம்.

அரிவாளை எடுத்துக்கொண்டு, அறுவடை காலத்தில் மட்டும் வயலருகில் செல்வதில் பொருள் இல்லை. மேடு

பள்ளத்தை நிரவல் செய்து, வரப்பெடுத்து, ஏர் உழுது, எருவிட்டு, நீர்பாய்ச்சி, நாற்று நட்டு, களை பிடுங்கி, காவல் காத்து, கதிர் தலைசாய்ந்த பின்னர்தான் அரிவாளுக்கு வேலை இருக்கமுடியும். இது அனுபவம்.

அதிகார ஆணவத்தில் சட்டம் செய்து, சமூகத்தில் வேரூன்றி யுள்ள தீயப்பழக்கத்தை ஒழித்துவிடலாம் என்பது, 'உரிமை'யின் இலட்சணம் தெரிந்தவர்கள் செய்கின்ற காரியமன்று. சட்டம் எத்தன்மையதாக இருந்தபோதிலும், அதனை நடைமுறையில் கொண்டு வரவேண்டியவர்கள் மனிதர்கள்தான். சட்டத்தால் தடை விதிக்கப்படும், அறிவுக்குப் பொருந்தாத பழக்க வழக்கத்திற்கு; 'தர்ம சாஸ்திர கட்டளை' என்று மெருகிட்டுப் பேசிப் பழகிவிட்ட வைதீகப் பிச்சுகளிடம், அருமையான சட்டத்தை அமல் நடத்த விட்டுவிட்டால், சட்டம் சக்தி இழந்துவிடும் என்பதைக் கூறத் தேவை இல்லை.

ரூசோவும், வால்டயரும், மக்கள் மனம் என்னும் நிலத்தை சீர்செய்து, புதிய கருத்துகள் என்னும் நல்ல விதையைத் தூவின பின்னர்தான், லெனின் முளைத்தார். அவர் பணியும் எதிர்பார்த்த பயனைக் கொடுத்தது.

ரூசோ பணியை பெரியார் செய்கிறார். அவரைக் குறைகூறும் ஏமாற்றம் அடைந்துள்ள எரி உள்ளத்தினர், ஐரோப்பிய வரலாற்றுச் சுவடிகளைப் படித்துவிட்டு, பின்னர் பேனா பிடிக்கட்டும். அப்பொழுதுதான் இத்தகைய பிதற்றலுக்கு இடமிருக்காது.

பெரியாரின் பொதுத் தொண்டிலே மேடு—பள்ளம்—சரிவு—ஏதாவது இருக்குமானால், அதற்காகப் பெரியாரைக் குறைகூறுவது பொருத்தமுடையதாகாது. இதோ பாருங்கள் ஏடெழுதி கூறுகிறார்:—

"1925-ல் எஸ். ராமனுதனது வகுப்புத் தீர்மானம் ஈ. வே. ராவைப் பிற்போக்கில் வீழ்த்திற்று. வீழ்ந்த ஈ. வே. ரா.வைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே ஸ்ரீ ராமனுதன் மீண்டும் காங்கிரசில் சேர்ந்து மந்திரியானர்."

படியுங்கள்—மீண்டும் ஒருமுறை படியுங்கள்—மூன்ருவது முறையாகவும் படியுங்கள். சுயமரியாதை இயக்கத்தின் சூத்திரதாரி தோழர் இராமநாதன். முக்கிய தளபதி—ஏக தளபதி—அன்று இராமநாதன், பெரியார் படையில். வகுப்புத் தீர்மானம் என்னும் களத்தில் கொண்டுபோய் நிறுத்திவிட்டார் பெரியார் இராமசாமியை, தளபதி இராமனுதன். துரோகி, தோழர் உருவில் உறவுகொண்டாடியதை பெரியார் இராமசாமி உணர்ந்துகொள்ளவில்லை. தோழர் என்று நம்பி போர்க்களத்தில் புகுந்து போரிடுகிருர் பெரியார். எதிரிகள் வீசும் அம்பு மார்பில் தைக்கிறது, மதிக்காது—மலைவுருது போரிடுகிருர் பெரியார். சிரசுக்கு நேரே, குறிபார்த்து பகைவர்கள் வீசும் பாணங்களுக்கெல்லாம் தப்பித்துக்கொண்டு, தொடுத்த போரைத் தொடர்ந்து நடத்திவருகிருர். போர்க்களத்திலே இது நடக்கிறது—நடந்துகொண்டு இருக்கிறது. தோழர், துரோகியாகி விடுகிருர். சிரித்துக்கொண்டு, களத்தை விட்டு வெளியேறுகிருர். அவருடைய துரோகம்,—இந்த அப்பாவியின் கூற்றுப்படி—அதற்கு மேலும் செல்லுகிறது. எதிரிப் படையில் இரண்டறக் கலந்துவிடுகிருர். அதுவும் எதிரிப் படையின் முன் வரிசையில் நின்று, வீசுகிருர் வேலினை வெற்றிறல் வீரன்மீது — முன்னுள் தோழர்மீது.

வேதனை மிக உடையது—ஆனல் விசித்திரமானது—வேறு எங்கும் நடந்திராதது. முதல் முன்னேடியின்

இலட்சணமே இதுவானல், மற்ற குறிப்பிடத் தகுந்த தோழர்களின் இழிகுணம் எவ்வாறு இருந்திருக்கும்? இந்த அருமையான கூட்டுத் தோழர்களின் துணை கொண்டுதான், பெரியார், 'மாபெரும் புரட்சி வீரராக' (எழுத்தாளரின் அகராதிப்படி) ஆகியிருக்கவேண்டுமாம்!

ஐயோ பாவம்! தோழர் இராமநாதன் அவர்களிடம், இந்தப் பேனுத் தாங்கி, கொண்டுள்ள நட்பின் காரணமாகவோ என்னவோ, அவரை மட்டும் காப்பாற்ற நினைத்து; அவரை ஒரு முதல்தரமான துரோகியாக ஆக்கிவிட்டிருக்கிருர். நமது இயக்கத்தில் எவரும், இவ்வாறு கொள்ளார் — கூருர் — முன்னுள் இயக்கப் பணி புரிந்தோரை. நன்றியும் காட்டுவர், அவர்களுக்கு, நமது பணியில் குறுக்கிடாது இருக்கும் வரையில். சிறுமதிகொண்டு சீறி எழுந்து, இட்டுக்கட்டிப் பேச முனைவரேல், சிலபல கூறுவர் சீற்றந்தணிய-நல்வழி நாட.

பெரியார் புரட்சிப் பாதையில் செல்லாமல் வழுக்கி விழுந்துவிட்டார் என்று பழிசுமத்தி பரிகசிக்கிறது களே இந்த மண்டூகங்கள், அதுகளை ஒன்று கேட்க விரும்புகிறேன், பெரியார் புரட்சி வீரராக இல்லாத தால்தான் வெளியேறினர் சில இளைஞர்கள் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையானல், அவ்வாறு வெளியேறிய இளைஞர்கள் என்ன செய்திருக்கவேண்டும்? என்ன செய்தார்கள்? என்ன செய்துகொண்டிருக் கிருர்கள்? என்று ஆராய்வோம்.

ஏழை மக்கள் துயர் நீங்க—துன்பம் துடைக்க— இல்லாமையைப் போக்க — கிளர்ச்சி செய்ததற்காக, சாகும் வரையில் சிறைவாசம் என்னும் தண்டனையை அடைந்துவிடவில்லை தோழர் இராகவன்!

172828

'நாத்திகம்' பேசிய வழக்கறிஞர், சிவவேடந்தாங்கி, திருத்தல யாத்திரைசெய்துகொண்டு,தில்லையில் குடியேறி, தில்லை மூவாயிரவரைத் தோத்திரம் செய்துகொண்டு, 'அடியார்க்கும் அடியேன்' என்று அழுது புலம்பிக் கொண்டு, புரட்சியை விதைத்துக்கொண்டிருக்கிறர்! புண்ணியந் தேடிக்கொண்டிருக்கிறர், அறுபத்திநான்காவது நாயனராக ஆவதற்கு, என்று சிலர் சொல்லுகிறர்கள், அவர் செய்யும் முயற்சியைக் கண்டு!

மற்றெருவரோ, தோழர் சாமிசிதம்பரனர். 'அறிவுக் கொடி' நடத்தி, அவருக்கு இருந்த அறிவெல்லாம் தீர்ந்துவிடவே, அச்சுக்கூடத்தையும் விற்றுவிட்டு, அக்கம்பக்கம் பார்த்துப் பெரியாரைப் பழித்துப் பேசும் பெரும் தொண்டாற்றி வருகிறர். பகவத்சிங்போல், மலாய் மண்ணில் பதைக்கப் பதைக்கத் தூக்கிலிடப்பட்ட மாத்தமிழ் வீரன் கணபதிபோல், தூக்குமேடையில் தொங்கவில்லையானலும், அந்தக்காலத்திலே அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டவர் பட்டியலில் சிதம்பரனர் பெயர் இருக்குமோ என்று எதிர்பார்த்தவர்களில் நானும் ஒருவன். என்ன இருந்தாலும் புரட்சி வீரரல்லவா அவர்? எப்படிப் பகிரங்கமாக வெளியில் உலவமுடியும்?

தோழர் ஜீவானந்தம் ஒருவர்தான் தனக்குச் சரியென்று பட்ட இலட்சியத்துக்காக தொண்டாற்றுவதோடு மட்டுமல்லாமல், தலைமறைந்தும் வாழ்ந்துவருகிறர்.

அறிஞர் அண்ணவையும் விட்டுவிடவில்லை இந்த பேனுதாங்கி! பணந்திரட்டி வீடு வாங்கிக்கொண்டு வாழ்கிறராம், பணம் என்றலே, இந்தப் பஞ்ஞடைகளுக்குப் பிடிக்காது போலும்! அவருடைய அறிவுக்கும் ஆற்றலுக்கும் உழைப்புக்கும், தமிழ் மக்கள் இதுவரை

கொடுத்துள்ள விலை மிகமிகக் குறைவு என்பேன். புலியைப்பார்த்துப் பூனை சூடுபோட்டுக்கொள்வதால், நஷ்டம் புலிக்கல்ல பூனைக்குத்தான்! திருட்டுப்பாலும், உறித்தயிரும் இனி பூனைக்குக் கிடைக்காது'

'திராவிடம்' என்னும் வார்த்தை தமிழ் இலக்கியத்தில் யாண்டும் கையாளப்படவில்லையாம். எனவே நாம் 'திராவிடர்' என்று கூறிக்கொள்வது பொருந்தாதாம். 'திராவிடம்' என்னும் பெயரை நல்ல நாகரிகத்தோடு வாழ்ந்த மக்கள் இனம் என்று வரலாற்றுச் சுவடிகள் கூறுகின்றன. மனிதநூல் வல்லுநர் மதித்துப் பேசுகிறார்கள். ஆனால், பொதிச்சுமக்கும் பாத்திரம்போல், 'ஹிந்து' மதம் என்ற சுமையை இதுகள் தாங்கிக்கொண்டு இருக்கின்றனவே, அந்தச் சொல் தமிழ் இலக்கியத்திலாயினும் சரி, வடமொழி நூல்களிலாயினும் காணக் கிடக்கின்றதா? பழம்பெரும் நூற்களில் இல்லையாயினும் அந்தச் சொல் நல்ல பொருளையாவது கொண்டதாக இருக்கிறதா? அதுவும்கிடையாதே! 'திருடன்—பொய்யன்' என்றல்லவோ பாரசீக பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் வெட்கம் பிறக்கக்காணோமே, இந்த அழுக்குமூட்டையை வீசி எறிய, இந்த ஜந்துக்களுக்கு? வெள்ளி மூக்கு சிங்கங்களால் இது எவ்வாறு முடியும்?

* * *

பெரியார் யார்? அவர் தொண்டு எத்தகையது? அதற்குத் தேவை இருக்கிறதா?

தமிழர்கள் நிலை யாது? இழிந்த நிலை ஏன் பெற்றனர்? பெரியாரின் இடையறா உழைப்புக்கும், அதற்கும் உள்ள உறவு என்ன?

பெரியார் மேதையா? அவர் பிரசாரம் எத்தன்மை கொண்டது? வரலாற்றிலே அவருக்குள்ள இடம் எது?

பெரியாரைத் தூற்றுபவர்கள் எவர்? எவர்? அவர்கள் எந்த வகையில் அழைத்தற்குரியவர்கள்?

இவ்வளவு வினாக்களுக்கும், நாம் விடைகூற முனைந்தால், பெரியார் மீது நாம் கொண்டுள்ள பற்றுதலினால்தான் புகழ்ந்தோதுகிறோம் என்று, நினைப்பர்—வெளியிடுவர்—சில நச்சு நாவினர். எனவே, பெரியாரைக் குறித்து நாம் பேசுவதை நிறுத்திக்கொண்டு, தமிழ் எழுத்தாளர்களிலே தலை சிறந்தவரான தோழர் வ. ரா. அவர்களின் கண்களுக்குப் புலனாகியுள்ள பெரியாரை, வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன். அதன் பிறகாவது, பெரியாரைப் பிழை படப் பேசும் மரமண்டைகள் வாயடங்கி வெட்கித் தலைகுனியட்டும்!

## பெரியார் மேதாவிலாசம்

✳ "அவ்வப்போது, படிக்காத மேதாவிகளை இயற்கை தோற்றுவித்து, மார்பைக்கூடக் கோணலாகப் பார்த்துக்கொள்ளும் படிப்பாளி பட்டதாரிகளைப் பழிக்கும் காட்சியை, அற்புதம் என்று சொல்வதா? அவசியம் என்று சொல்வதா? பள்ளிப் படிப்புக்கும் நாய்க்கரின் "மேதை"க்கும் துளிக்கூட சம்பந்தம் கிடையாது

## தமிழர் வீழ்ச்சியுற்றதேன்?

✳ "பல்வேறு கூட்டத்தார்கள் தமிழ் நாட்டில் வந்து குடியேறிய பின்னர், தமிழ் நாட்டின் பெருமை குன்றிப்போய்விட்டது.

* "நமது சமுதாய சக்தி ஓழுகிப்போகும் ஓட்டைகளை, நாய்க்கர் அவர்கள் ஆவலுடன் தேடினார். ஜாதிக் கொடுமை, மூடபக்தி, தீண்டாமை, வலியார் மெலியாரை வருத்தும் அசட்டுத்தனமான பரம்பரை அவலட்சணம், மனச்சாட்சியை ரப்பரைப்போல் அமைத்துக்கொள்ளும் சாமர்த்தியம், எதற்கும் சமாதானம் சொல்லும் விசித்திர ஜாலவித்தை, பெண்களின் முன்னேயும் பின்னேயும் பக்கத்திலும் படுதா, கிளிப்பிள்ளை வேதாந்தம், திண்ணை தத்துவம், போலி மதம், பிடுங்கல் புரோகிதம்,—இவையும் இவை போன்றவை யாவும் ஓட்டைகள் என்று நாய்க்கர் கண்டார்

## பெரியார் பேச்சு

* "அப்பா! நாய்க்கரின் அழகுப் பிரசங்கத்தை, ஆணித்தரமான சொற்களை, அணி அணியாய் அலங்காரம் செய்யும் உபமானங்களை, உபகதைகளை, அவரது 'கொச்சைத் தமிழ்' வார்த்தை உச்சரிப்பை, அவரது வர்ணனையை, உடல் துடிதுடிப்பை, பார்க்கவும் கேட்கவும் எவ்வளவு தூரத்திலிருந்து ஜனங்கள், வண்டுகள் மொய்ப்பதுபோல், வந்து மொய்ப்பார்கள்!

* மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு, நாய்க்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் போன்றது என்பதில் சந்தேகமில்லை.

## பெரியார் செயல் திறம்

* "யோசித்து யோசித்து கோழையாகும் கூட்டத்தை, நாய்க்கர் அவர்கள் சேர்ந்தவரேயல்ல. செய்ய வேண்டும் என்று தோன்றியதை, தயங்காமல் செய்யும் தன்மை அவரிடம் காணப்படுவதுபோல் தமிழ்நாட்டில் வேறு எவரிடமும் காணப்படுவதில்லை.

## ' பெரியார் ' பொருத்தமானது

✳ "தனக்குத்தானே யோசிக்கும் பொறுப்பையும் திறமையையும் தமிழர்கள் உள்ளத்தில் ஓரளவு (அதைப் பெரிய அளவு என்றுகூடச் சொல்லலாம்.) தூண்டிய ராமசாமி நாய்க்கரைப் 'பெரியார்' என்று அழைப்பதில் என்ன பிழை இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

## நாஸ்திகப் பட்டம் பொருத்தமா ?

✳ "மனச்சாட்சிக்கும் தொண்டுக்கும் பக்தனை நாய்க்கரை, நாஸ்திகன் என்று அழைக்கும் அன்பர்கள், நாஸ்திகம் யாது என்று தெரிந்துகொள்ளவில்லையென்றே நான் சொல்லுவேன்.

## பெரியார் சகாப்தம்

✳ "நிகழ்காலமும் வருங்காலமும் நாய்க்கருக்குத்தான்.

✳ "தமிழ் நாட்டின் வருங்காலப் பெருமைக்கு நாய்க்கர் அவர்கள் "முன்னோடும் பிள்ளை," தூதுவன்.

## எவர் பழிப்பர் ?

✳ "மநு நூல் பார்வையைக் கெடுத்துவிட்டது; நன்னூல் பாஷையைக் கெடுத்துவிட்டது" என்று ஒரு நண்பர் சொன்னார். இவை இரண்டுடன் சலிக்காமல் போர் தொடுக்கும் நாய்க்கரை, அந்தி மாலைப் பார்வை கொண்டவர்கள் துவேஷிக்கலாம், திட்டலாம்."

பெரியார் பற்றிய, இந்த வ. ரா.வின் எழுத்தோவியத்தை ஏடாக்கித் தந்தது,—மீன் கடையில் மல்லிகை மலர் விற்க முனைந்ததுபோல்,—தமிழ்ப்பண்ணைதான் !

ஆனால், அந்த நல்லபுத்தி நீடித்து நிற்கவில்லை. காரணம், அந்த நல்லபுத்தியே பொருளீட்டுவதில் பின்னிக் கொண்டு இருந்ததால்தான்!

மீண்டும், மீன் விற்பதோடு மட்டும் நில்லாமல் காய்ந்த கருவாடு விற்கும் நிலைக்குப் போய்விட்டது பண்ணை!

கற்பூரம் விற்ற காசு மணக்குமா? கருவாடு விற்ற காசு நாற்றமடிக்குமா? எதனை விற்றாலும் ரூபாயுக்குப் பதினாறு அணாதானே!

புளியம் பழத்துக்கும் அதன் ஓட்டிற்கும் தொடர்பு இருப்பதில்லை. இதன்படி, ஏடு தாங்கி நிற்கும் கொள்கைக்கும், அதனை வெளியிடும் வேஷதாரிகளுக்கும், எந்தவிதத் தொடர்பும் இருக்கக்கூடாது என்று, முடிவிற்கு வந்துவிட்டதுபோலும் பண்ணை!

பணத்தை எண்ணிப்பார்க்கத் தெரிந்த அளவிற்கு, நாட்டு நிலையை மதிப்பிட்டுப் பார்க்கும் புத்தியைப் பெற்றிராமல் இருப்பது வேடிக்கையானதுதான். இரண்டொரு ஏடு எதிர்பார்த்தபடி, பணந்தரலாம். விளைவு அத்துடன் நின்றுவிடாதே!

தேன்கூட்டைக் கண்டு, நாக்கில் நீர் சொட்டச் சொட்ட, கூண்டை அழிக்கும் பணியை மேற்கொள்ளும் பொழுது, காணும் தேனீக்கள் பதைபதைத்து, கோபங் கொண்டு கொட்ட வருமே! அது தேனைப் போன்று இனிக்கக்கூடியதன்றே! தேனும் கிடைக்கும், அத்துடன் தவறாது வேதனையும் கிடைக்கும். இது, முதல் கொட்டுதல். எரிச்சலும் குறைவாக இருக்கும். இன்னும் அதிகம் இருக்கிறது, எரிச்சலைப் பெருக்கக்கூடியது.

* * *

மணக்கும் இரோஜாவிற்கும் முட்கள் உண்டு—இனிக்கும் பலாவிற்கும் கொட்டைகள் உண்டு—பால் நிலவிற்கு மாசு உண்டு—பெரியாரிடமும் குற்றம் குறைகள் இருக்கலாம். அதனையே பெரிதாகப் பாராட்டிக்கொண்டு, அவர் உழைப்பையும் - அதன் விளைவாகத் திராவிடர் பெற்றுள்ள விழிப்பினையும் - குறைத்து மதிப்பிட்டுப் பேசுவது கூடாது - அடாது. அது, திராவிடர்களுக்குச் செய்யும் மகத்தான துரோகமாகும். திராவிடர் இயக்கமும், பெரியாரும் ஒன்றாகக் கலந்துபோயிருக்கும் காரணத்தால், அவரைப் பழிப்பது திராவிடர் இலட்சியத்தையே குறைத்துக் கூறுவதாக வந்து முடியும். இதனை, 'திராவிடத் தோழர்களே, மறந்துவிடாதீர்கள்!'

## ✷ புதிய நூல்கள் ✷

| | | | |
|---|---|---|---|
| மூலபலம் முறிகிறது (அண்ணா) | 0 | 8 | 0 |
| தேவலீலைகள் ,, | 0 | 8 | 0 |
| வாழ்க்கைப் புயல் ,, | 0 | 12 | 0 |
| இராம இராச்சியம் (கைவல்யம்) | 0 | 10 | 0 |
| கருஞ்சட்டைப் படை | 0 | 3 | 0 |
| உலகம் கண்ட திராவிடம் | 0 | 2 | 0 |

விற்பனைக் கழிவு 20 பர்சன்ட்

| | | | |
|---|---|---|---|
| அறிஞர் அண்ணாதுரை (தொகுப்பு நூல்) | 1 | 4 | 0 |
| பெரியார் இராமசாமி ,, | 1 | 12 | 0 |
| பலிபீடம் நோக்கி (மு. கருணாநிதி) | 0 | 6 | 0 |
| கதம்பம் (தில்லை வில்லாளன்) | 0 | 8 | 0 |
| கழுதை ஊர்வலம் ,, | 0 | 8 | 0 |
| புரோகிதன் முளைத்தான் | 0 | 3 | 0 |
| நடிகவேள் எம். ஆர். ராதா | 0 | 3 | 0 |
| பெரியார் மணிமொழிகள் | 0 | 3 | 0 |
| அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி | 0 | 8 | 0 |
| முதலாளி ஒழிக (பெரியார்) | 0 | 6 | 0 |
| மதித்தலைவர் பெரியார் (மடத்தலைவருக்கு மறுப்பு) | 0 | 4 | 0 |
| இந்தி மறுப்புப் பாடல்கள் | 0 | 2 | 0 |

விற்பனைக் கழிவு 25 பர்சன்ட். தபால் செலவு இனாம்.

✷

## அறிவுப் பண்ணை

6, மங்கம்மாள் தெரு,

ஏழுகிணறு, — சென்னை-1.